தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வெள்ளிக்கிழமை 1982 பிப்ரவரி 19

(மாசி 7, துன்மதி-திருவள்ளுவர் ஆண்டு 2013.)

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஒல்லும்வாய் எல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல்"

எளிதாகச் செய்து முடிக்கும் இடங்களில் எல்லாம் வினையைச் செய்து முடித்தல் நல்லதாகும். இயலாதபோது இருக்கும் வழிகளை ஆராய்ந்து செய்ய வேண்டும்.

(1) வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

பின்தங்கியவர்களுக்கான வேலை வாய்ப்பு

*வினா எண் 261—திரு. இல. பலராமன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) அரசு பின் தங்கியவர் பட்டியலில் உள்ள ஜாதிகள் எண்ணிக்கை யாது?

(ஆ) இவர்கள் வேலை வாய்ப்புக்கு தம்பார்ட்மெண்டல் ரிசர்வேசன் செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட 70 இனத்தவரையும், கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள செங்கோட்டை வட்டத்தில் 21 வகுப்பினரையும் சேர்த்து மொத்தம் 213 வகுப்பினர்கள் பிற்பட்ட வகுப்பினர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஆ) கல்வி நிறுவனங்களில் சேருவதற்கும் பொதுப் பணியிடங்களில் சேருவதற்கும் பிற்பட்டோருக்கென 50 விழுக்காட்டு இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. பின் தங்கிய வகுப்பினரிலேயே மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளவர்களுக்கு தனி ஒதுக்கீடு செய்வது பற்றிய செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

[1982 பிப்ரவரி 19

திரு. பாபு ஜனார்த்தனன்: பேரவைத் தலைவர் அவர்களே, பின் தங்கியோர் பட்டியல் நீண்ட நாட்களுக்கு முன்பு தயாரிக்கப் பட்டதாகும். இன்றுள்ள நிலைமையில், முன்பு பிற்படுத்தப் பட்டவராக இருந்தவர்கள், முற்படுத்தப்பட்ட நிலையிலும், முன்பு முற்படுத்தப்பட்டவர்கள் என்ற நிலையில் இருந்தவர்கள் இன்று பிற்படுத்தப்பட்ட நிலையிலும் இருக்கின்றனர். ஆகவே, இதை மீண்டும் பரிசீலனை செய்து எவையெவை பிற்படுத்தப் பட்டோர் பட்டிய ல் இன்றுள்ள நிலையில் சேர்க்க வேண்டும் என்பதற்கு அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் பட்டியல் நீண்டகாலத்திற்கு முன்பே தயாரிக்கப்பட்டிருந்தாலும் கூட, அவற்றில் பல்வேறு வகுப்பினர் பிற்பாடு சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இப்போது பல்வேறு வகுப் பினர்கள் அந்தப் பிற்பட்டோர் பட்டியலில் தங்கள் வகுப்பையும் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள் ஆனல் சென்சஸ் கணக்கு எடுக்கப்பட்டு அதன் மூலம் ஒவ்வொரு வகுப்பினரின் கல்வித் தகுதி, பொருளாதார சூழ்நிலை மற்றும் பல விவரங்கள் தொகுக்கப்பட்ட பின்தான் அது குறித்து முடிவு செய்ய வேண்டும். இந்த பட்டியலில் சேர விரும்புகின்ற அனைவரும் மாணவர்கள் பெறும் சலுகைகள், வேலைவாய்ப்பில் முன்னுரிமை ஆகியவற்றை பெறவேண்டும் என்று விரும்பு கிறார்கள். அரசு அதனை அவ்வப்போது ஆராய்ந்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, 218 வகுப்பினர்கள் பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் இருப்பதாகச் சொன்னார்கள். நீண்டகாலத்திற்கு முன்பு தயாரிக்கப்பட்ட இந்தப் பிற்படுத்தப் பட்ட பட்டியலில், குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப் பட்டவர்களுக்கு ஆங்கிலேயர் காலத்தில் இருந்தே பல சலுகைகள் கொடுக்கப்பட்டு வந்து இருப்பதால், இந்த ஆட்சி காலத்திலே அந்த வகுப்பினருக்கு என்று ஒரு 50 சதவீதம் தனியாக ஒதுக்கீடு செய்து, அவர்களுக்கு தனிச் சலுகைகள் அளிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்திற்கு பல்வேறு கல்வி வசதிகள், மற்றவைகள் தனியாகத்தான் கவனிக் கப்பட்டு வருகின்றன. அவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வர்கள் என்ற முறையில் கவனிக்கப்பட்டு வருகிறார்கள். ஆனல் அவர்களுக்கு என்று 50 சதவிகிதம் தனியாக ஒதுக்க வேண்டும் என்று முன்பு இருந்த அரசே பரிசீலித்தது. அப்போதே இயலாது என்று எடுத்துச் சொல்லி விட்டார்கள். இந்த அரசு அதை மீண்டும் பரிசீலித்து வருகிறது. ஏற்கெனவே ஒதுக்கப்பட்டுள்ள 50 சதவிகிதத்தில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை இந்த மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு என்று ஒதுக்குவது குறித்து சட்ட

1982 பிப்ரவரி 19]

துறையும் அட்வகேட் ஜெனரலும் மற்றவர்களும் ஆலோசித்துக் கொண்டு இருக்கிறார்கள். எந்த நிலைமையிலும் நாம் செய்ய இருக்கின்ற வழிமுறைகள் உச்ச நீதிமன்றத்திலோ, உயர்நீதி மன்றத்திலோ அடிபடாமல் இருக்கும் அளவிற்கு விதிமுறைகள் ஆராயப்பட வேண்டும் என்று சொல்லி இருக்கிறோம். அது பரிசீலனையில் இருக்கிறது.

திரு பி. துரைராஜ்: தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களைச் சேர்ந்தவர்கள் மதம் மாறிவிட்டால் அவர்களை முற்பட்ட சமூகத்தினராகக் கருதி, அவர்களுக்கு எந்தவிதமான சலுகைகளும் அளிக்கப்படுவது இல்லை. அவர்கள் எல்லாவகைகளிலும் பின்தங்கிய நிலையில் தான் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் என்ற பட்டியலில் சேர்த்துக் கொள்வதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இப்போது மிகவும் பிற்பட்ட வகுப்பினருக்கு என்று சில பொருளாதார சலுகைகள் தனியாக அளித்து வருகிறோம். ஆனால் இட ஒதுக்கீட்டில் அப்படி தனியாக சலுகை செய்ய இப்போது இயலவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்று அவர்களுடைய நிலை என்ன என்ற விவரமும் இல்லை; அவர்களுக்குத் தனியாக சலுகைகள் அளிக்கும் உத்தேசமும் இல்லை.

திரு. கே. ஆர். சுந்தரம்: தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டத்திலும் தருமபுரி மாவட்டத்திலும் ஒட்டர்கள், போயர்கள் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருப்பதாக கூறியிருக்கிறார்கள். அவர்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதால் அவர்களுக்கு தனியாக ஏதாவது சலுகைகள் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஒட்டர்கள், போயர்கள் ஏற்கெனவே பிற்பட்ட பட்டியலில் இருக்கிறார்கள். அவர்களை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில்தான் சேர்த்திருக்கிறோம்.

திரு எல். இளையபெருமாள்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அரிசனராக இருந்த ஒருவர் கிறிஸ்தவராக மதம் மாறிவிட்டால் அவர் குறிப்பிட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்படுவதாகச் சொன்னார்கள். தமிழ்நாட்டிலே அவர்கள் கிறிஸ்தவர்களாக மாறினாலும், ஆறுமுகம் என்ற இந்து அரிசன் ஆரோக்கியசாமி என்று பெயரிலே மாற்றம் ஏற்படுகிறதே தவிர வேறு எந்த நிலையிலும் மாற்றம் இல்லை. டீ கடைகளிலானாலும் ஓட்டல்களிலானாலும் மற்ற இடங்களிலானாலும் இந்துவாக இருந்த அதே நிலையில்தான் இருக்கிறார்கள். இந்த அவல நிலை இருப்பதால்தான் அவர்களுக்கு அரசியல் சாசனத்திலேயே சில சலுகைகளை வரையறுத்து வைத்திருக்கிறார்கள். சமூகத்திலே, பொருளாதாரத்திலே எந்த முன்னேற்றமும் அடையாமல் இந்துவாக இருந்தவர் கிறிஸ்தவராக மாறினார் என்ற ஒரே

காரணத்திற்காக பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்துவிட்டால் அரிசன மக்களுக்குள்ள சலுகைகள் கிடைப்பதில்லை. எதிர்காலத்திலாவது அமைச்சரவர்கள் இதுபற்றி பரிசீலிப்பார்களா? அவர்களுக்கு வேறு வகையிலே நிவாரணம் அளிப்பதற்கு சலுகைகள் அளிப்பதற்கு மதம் காரணமாக இல்லாமல் பார்த்துக் கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, பொது இடங்களில் அரிசனாக இருந்தாலும், பிற்பட்டவராக இருந்தாலும் வேறுபாடு காட்டக் கூடாது; வேறுபாடு காட்டினால் நடவடிக்கை எடுக்க சட்டங்கள் இருக்கின்றன. ஆனால், அரிசனங்களுக்கு என்று கொடுக்கப்பட்டிருக்கிற சலுகைகள் எல்லாம் அவர்கள் இந்து அரிசனங்களாக இருக்கும் வரையில்தான் கிடைக்கும்; கிறிஸ்தவர்களாக மாறிவிட்டால் அந்த சலுகைகள் கிடைக்காது., சலுகைகள் இல்லை என்று திட்டவட்டமாகச் சொல்கிறோம். அரிசன கிறிஸ்தவர் என்று சென்னால் அவர்கள் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டு, அதற்குள்ள சலுகைகளைப் பெற தகுதியுடையவர்கள் ஆவார்கள். மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட வேண்டுமென்றால் அவர்கள் எந்த இடத்திலிருந்து, எந்த இனத்திலிருந்து வந்தவர்களோ அதைப் பொருத்திருக்கிறது. மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டால் அதற்குரிய சலுகைகளைப் பெற அவர்கள் தகுதி உடையவராவார்கள்.

சிறுசேமிப்புத் திட்டம்

*வினா எண் 262—திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

சிறு சேமிப்பு பற்றி பொதுமக்களுக்கு விளக்கிட அரசு ஏதேனும் தீவிரமான திட்டம் தயாரித்து வருகிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: விவர அறிக்கை சட்டப் பேரவையில் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஜே. எஸ். இராசு: தலைவரவர்களே, சிறு சேமிப்பு இயக்கத்தைப் பற்றி பொதுமக்களுக்கு மேலும் விளக்குவதற்காக திரைப்படம் ஒன்று தயாரிக்க திட்டமிடப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். ஆம் எனில் கதை, வசனம், பாடல்கள் தயாராகி விட்டனவா? நடிகர்கள், நடிகைகள் யார், யார்? அந்தப் படம் எப்போது வெளிவரும்?

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஒரு கருத்தை பொதுமக்களுடைய உள்ளத்தில் ஆழப் பதியவைப்பதற்கு திரைப்படம் சிறந்த சாதனமாகும். கல்வியைப் பொறுத்த வரையில்கூட மேலை நாடுகளில் இந்தத் திரைப்பட முறையை பயன்படுத்துகின்றார்கள். குடும்ப நலம் திட்டம், சிறு சேமிப்புத்

122 ஆம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

சத்யமேவ ஜயதே TRUTH ALONE TRIUMPHS